## 1. மகள் இந்திராவுக்கு நேரு எழுதிய கடிதம்

⇒ இந்தியாவின் சுதந்திரப் போராட்ட வீரரும், முதல் பிரதமருமான ஜவர்கலால் நேரு தன் மகள் இந்திராகாந்திக்கு 1922 முதல் 1964 வரை 42 ஆண்டுகள் கடிதங்கள் எழுதியிருக்கிறார். அவர் வெளிநாட்டில் இருந்த பொழுதும், இந்தியாவில் சிறையில் இருந்த பொழுதும் கடிதங்கள் எழுதினார்.

⇒ மேற்கு வங்காளத்தில் உள்ள தாகூரின் விசுவபாரதி கல்லூரியில் இந்திரா காந்தி கல்வி பயின்றபோது, அல்மோரா மாவட்டச் சிறைச்சாலையிலிருந்து 1935, பிப்ரவரி 22–ஆம் தேதி நேரு எழுதிய கடிதத்தின் பகுதி இப்பாடப் பகுதியில் வந்துள்ளது.

⇒ நேரு இங்கிலாந்தில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் படித்தார். கிருபளானி என்பவர் தாகூர் விசுவபாரதி கல்லூரியில் பணிபுரிந்த பேராசிரியர்.

⇒ ஆசிரியர்களை தனியாக சந்தித்து உரையாடுதலும், ஆலோசனை பெறுதலுமே வகுப்பறையில் கற்பதை விட சிறந்தது என்கிறார் நேரு.

⇒ **பிளேட்டோ பற்றி நேருவின் கூற்று**

**'பிளேட்டோ'** என்ற கிரேக்க சிந்தனையாளர் எழுதிய புத்தகங்கள் சுவையானவை, சிந்தனையை துண்டுபவை. "கிரேக்க நாடகங்கள் நம் ஆர்வத்தை தூண்டுவதுடன் சுருக்கமாகவும் வாசிக்க எளிதாகவும் இருக்கும்".

⇒ **நேரு தன் மகளிடம் படிக்கச் சொல்லி பரிந்துரைத்த நூல்கள்:**

⇒ ஷேக்ஸ்பியர், மில்டன் போன்றோர் அற்புதமான ஆங்கில படைப்பாளிகள். அவர்களின் நூலை படிக்க வேண்டும்.

• பெர்னாட்ஷாவின் நூல்கள் வாசிக்கத் தகுந்தவை.

⇒ கிரேக்க சிந்தனையாளர் பிளேட்டோவின் படைப்புகளை படிக்க வேண்டும்.

⇒ காளிதாசரின் "சாகுந்தலம்" வாசிக்க வேண்டிய நூலாகும்.

⇒ உலகின் மிகச்சிறந்த நூல்களுல் ஒன்றான டால்ஸ்டாயின் **'போரும் அமைதியும்'** என்ற நூல் வாசிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

⇒ **'பெட்ரண்ட் ரஸ்ஸலின்'** ஆங்கிலம் மிக அருமையாக இருக்கும். அறிவுப்பூர்வமான எழுத்து அவருடையது.

⇒ **நாம் ஏன் புத்தகம் வாசிக்க வேண்டும்? என்பதற்கு நேருவின் கூற்று:**
அறிவை பெறுவதற்காக, மகிழ்ச்சி அடைவதற்காக என்று பல காரணங்களை சொல்லலாம். ஆனால் இதற்கு மேலும் ஒரு காரணம் உண்டு. ஆயிரம் முகங்கள் கொண்டது வாழ்க்கை, அதை புரிந்து கொள்ளவும், சரியாக வாழவும், புத்தக படிப்பு அவசியம்.

| | |
|---|---|
| **கேம்பிரிட்ஜ்** | இங்கிலாந்தில் உள்ள பல்கலைக்கழகம் |
| **சேக்ஸ்பியர்** | ஆங்கில நாடக ஆசிரியர் |
| **பிளேட்டோ** | கிரேக்க சிந்தனையாளர் |
| **காளிதாசர்** | வடமொழி நாடக ஆசிரியர் |
| **டால்ஸ்டாய்** | ரஷ்ய நாட்டு எழுத்தாளர் |
| **பெர்னாட்ஷா** | ஆங்கில நாடக ஆசிரியர் |
| **பெட்ரண்ட் ரஸ்ஸல்** | சிந்தனையாளர், கல்வியாளர். |
| **அல்மோரா சிறை** | உத்திராஞ்சல் மாநிலத்தில் உள்ளது. |
| **கிருபளானி** | விஷ்வ பாரதியில் பணி புரிந்த பேராசிரியர் |

## 2. காந்தியடிகள் கடிதம்

⇒ 1917–ஆம் ஆண்டு புரோச் நகரில் நடைபெற்ற 2–வது கல்வி மாநாட்டில் காந்தியடிகள் நிகழ்த்திய தலைமை உரை கடித வடிவில் அமைக்கப்பட்டுள்ளது.

**அவர் உரையின் தொகுப்பு:**

⇒ பயிற்று மொழியாக தாய்மொழி தான் இருக்க வேண்டும். பயிற்று மொழியை பற்றி சிந்திக்காமல் கல்வி கற்பது அடித்தளம் இல்லாமல் மேற்கட்டடத்தை எழுப்புவது போன்றது.

⇒ வேலை தெரியாத தொழிலாளி தன் கருவியின் மீது சீற்றம் கொள்வான் என்பது போலதான், மொழியை குறை சொல்பவர்களின் நிலையும். குறைபாடு, மொழியை பயன்படுத்துகிறவர்களிடம் உள்ளதே தவிர, மொழியில் இல்லை.

⇒ பள்ளிக்கூடம் வீட்டை போல் இருக்க வேண்டும். குழந்தைகளுக்கு வீட்டில் தோன்றும் எண்ணங்களுக்கும், பள்ளியில் ஏற்படும் எண்ணங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும்.

⇒ தெரிந்தறியாத ஒரு மொழியின் மூலம் கல்வி கற்பிக்கக் கூடாது. தாய் மொழியின் வாயிலாக கற்பதன் மூலம் ஆங்கில அறிவை பெறுவது பாதிக்கப்படுமா ? இல்லையா ? என்பது பற்றி சிந்திக்க தேவையில்லை.

⇒ படித்த இந்தியர் அனைவரும், அயல் மொழியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்பதில்லை. அயல் மொழியிடம் பற்றுதலை தோற்றுவிப்பது, ஊக்கமளிப்பது தேவையில்லை.

⇒ கவி ரவீந்திரநாத் தாகூரின் ஈர்ப்பான இலக்கிய நடையின் உயர்வுக்கு காரணம், அவரின் தாய்மொழி பற்று தான்.

⇒ முன்ஷிராம் பேசும் போது, மக்கள் அனைவரும் ஈடுபாட்டுடன் கேட்பதற்கு காரணம் அவர்தம் தாய்மொழி அறிவே ஆகும்.

⇒ மதன் மோகன் மாளவியாவின் ஆங்கில பேச்சு வெள்ளியைப் போல் ஒளிரினாலும், அவரது தாய் மொழி பேச்சு தங்கத்தை போல் ஒளி வீசுகிறது.

⇒ தாய்மொழி மூலம் நமக்கு கல்வி அளிக்கப்பட்டிருந்தால், ஜெகதீஷ் சந்திரபோஸ், பி.சி.ராய் போன்ற பலர் உருவாகி இருப்பார்கள்.

## 3. <u>மு.வரதராசனாரின் கடிதம்</u>

⇒ தம்பிக்கு, தாய்மொழி வளர்ச்சி பெற, டாக்டர். மு.வ கூறும் அறிவுரை :

⇒ தமிழ் ஒன்றே தமிழரைப் பிணைத்து ஒற்றுமைப்படுத்த வல்லது. தமிழ் ஆட்சி மொழியாகவும், கல்வி மொழியாகவும் மாற வேண்டும். இல்லையேல், தமிழுக்கு எதிர்காலம் இல்லை. சட்டசபை முதல் நீதிமன்றம் வரையில் தமிழ் வழங்க வேண்டும்.

⇒ அனைத்து வகை கல்லூரிகளிலும், எல்லா பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க வேண்டும். கடிதம், பண விடை, விளம்பரப்பலகை, விற்பனை சீட்டு முதலியவற்றை தமிழிலேயே எழுத வேண்டும். இவ்வாறு செய்தால், அஞ்சல் ஊழியர்கள், வணிகர்கள், வாங்கும் மக்கள் போன்றோரை தமிழை படிக்க வைக்க முடியும். இல்லையேல், அவர்கள் தமிழை மறந்து விடுவர்.

⇒ தமிழ் தெரியாதவர்களை விடுத்து, அனைவரிடமும் தமிழிலேயே பேச வேண்டும். திருமணம், வழிபாடு முதலியவற்றை தமிழில் நடத்த வேண்டும்.

“பேசப்படுவதும், கேட்கப்படுவதும்
உண்மையான மொழி எழுதப்படுவதும்,
படிக்கப்படுவதும் அடுத்த நிலையில்
வைத்து கருதப்படும் மொழியாகும்.
இவையே அன்றி வேருகை மொழி
நிலைகளும் உண்டு. எண்ணப்படுவது,
நினைக்கப்படுவது, கனவு காணப்படுவது
ஆகியவையும் மொழியே ஆகும்”.

**–மு. வரதராசனார்**

⇒ **<u>நாட்டுப்பற்று :</u>**

⇒ தமிழ்நாட்டுக்கும், தமிழ் மொழிக்கும் நன்மை செய்யாத செய்தித்தாள்களையும், இடையூறான நிலையங்களையும் புறக்கணிக்க வேண்டும்.

⇒ நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும், உடையவர்கள் நடத்தும் உணவு விடுதி, மருந்து கடை, துணிக்கடை முதலியவற்றில் மட்டுமே பொருள்களை வாங்க வேண்டும்.

⇒ தமிழர்களிடையே ஒற்றுமையை வளர்க்கும் செயல்களை செய்ய வேண்டும். கொள்கைகள், கட்சிகள், இயக்கங்களை விட நாட்டு மக்களின் நன்மையை பெரிதாக எண்ண வேண்டும்.

⇒ நாட்டில் உள்ள வறுமை, வேலையில்லா திண்டாட்டம், பிச்சை எடுத்தல் போன்றவை ஒழிய பாடுபட வேண்டும்.

⇒ தனிப்பட்ட மனிதனின் மானத்தை விட, நாட்டின் மானம் பெரியது என்று உணர்ந்து கொள்ள வேண்டும். நெருக்கடி நேரும்போது, தனிப்பட்ட மனிதனின் நலம், உயர்வு, மானம் ஆகியவற்றை நாட்டுக்காக விட்டுக் கொடுத்து நடந்து கொள்ள வேண்டும்.

⇒ **<u>தலைமை பண்பு :</u>**

⇒ தலைமைப் பதவி நம்மை தேடி வந்தால், ஏற்றுக்கொள்ள வேண்டும். நாம் அதை தேடி போக கூடாது. தலைமை தாங்குவதும் ஒருவகை தொண்டு தான். எனவே தொண்டுக்கு முன்பு தலைமைக்குப் பிந்து என்பதை நெறியாக கொள்ள வேண்டும்.

⇒ பொது நலத்திற்கு கட்டுப்படுதல், கீழ்ப்படிதல், தொண்டு செய்தல் ஆகியவற்றை பெருமையாக கொள்ள வேண்டும்.

## 4. <u>அண்ணாவின் கடிதம்</u>

⇒ பேரறிஞர் அண்ணா முதலமைச்சரான பிறகு, எழுதிய பொங்கல் வாழ்த்து இக்கடிதத்தில் அமைந்துள்ளது. இக்கடிதம் ‘காஞ்சி இதழ்’ மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

⇒ ஒவ்வொரு ஆண்டும், பொங்கல் புது நாளன்று மக்களோடு மக்களாக இருந்து அவர்கள் கழித்திருக்கும் காட்சிகளை கண்டு மகிழ்வடைந்த அண்ணா, பதவிக்கு வந்த பின்பு அந்த மகிழ்ச்சி கிடைக்கவில்லை என்று வருந்துகிறார்.

⇒ எத்தனையோ இன்னல்கள் இருப்பினும், நலிந்தோரும் கூட பொங்கல் புது நாளில் புது தெம்புடன் காணப்படுகின்றனர். இந்நாளில் உழைப்பின் பெருமையைப் பற்றியும், அன்னாளில் தமிழர் வாழ்ந்த நேர்த்தியைப் பற்றியும் உரையாடி மகிழ வாய்ப்பு கிடைக்கிறது.

⇒ தாயும், சேயும் கொஞ்சி மகிழ்வது போல, நிலமடந்தையும் தன் மக்களுக்கு வளமளிக்கும் முன்பு, விளையாட்டு காட்டுவாள். “உழைத்துப் பெறு! உரிய நேரத்தில் பெறு! முயற்சி செய்து பெறு!” என்று அன்புடன் ஆணை இடுகிறாள்.

⇒ “அமிர்தென இனிக்கும் உழைப்பின் உயர்வை உணர்த்தும் சளைப்பில்லாத முயற்சிக்கு பயன் கிடைக்கும் நன்னாள்” என்ற கவிஞர்.முடியரசனின் கவிதையை மேற்கோள் காட்டியுள்ளார்.

⇒ **<u>முடியரசனின் கவிதை:</u>**

தமிழர் திருநாள் தை முதல் நாளாம்

அமிழ்தென இனிக்கும் பொங்கல் திருநாள்

உழைப்பின் உயர்வை உணர்த்தும் பெருநாள்

சளைப்பில்லா முயற்சி தரும் பயன்பெற்று

புதுமை இன்பம் பூணும் நன்னாள்

- பொங்குக இன்பம்! பொங்கக புதுமை!
  பொங்குக பொலிவு! வளம் பெருகிடுக!
  வாழ்வு சிறந்திடுக! வாழ்க தமிழ்! வாழ்க
  தமிழகம்!


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

⇒ என்று வாழ்த்துக்களுடன் தன் கடிதத்தை அண்ணா முடித்திருக்கிறார்.

⇒ தாகூர், நேரு, தி.கே.சி.வள்ளிக்கண்ணன், பேரறிஞர் அண்ணா, மு.வரதராசனார், கு.அழகிரிசாமி, கி.இராஜநாராயணன் முதலானோர் கடித வடிவில் இலக்கியங்கள் படைத்துள்ளனர்.

## 5. ஆனந்தரங்கம் பிள்ளை நாட்குறிப்பு

⇒ தனி மனிதனின் ஒரு நாளைய நிகழ்வுகள், குறிப்பிட்ட நாளில் நடந்த சமூக மாற்றங்கள், அரசியல் நிகழ்வுகள், இயற்கைப் பேரிடர்கள், உலகின் சிறந்த நிகழ்வுகள், ஆகியவை நாட்குறிப்பில் இடம்பெற வேண்டிய செய்திகள் ஆகும்.

⇒ ஆனந்தரங்கர் சென்னை பிரம்பூரில் (பெரம்பூர்) 1709–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30–ஆம் நாள் பிறந்தார். ஆனந்தரங்கர் ஏறத்தாழ 25 ஆண்டுகள் நாட்குறிப்பு எழுதினார்.

⇒ ஆனந்தரங்கர் தம் நாட்குறிப்பில் தந்தைக்கும், மகனுக்கும் இடையேயான உறவு பெரியவர்களை மதிக்கும் பண்பு, பெரியவர்களுக்கு வணக்கம் செய்தல், கோயில் திருவிழாக்கள், பழக்கவழக்கங்கள், சடங்குகள் எவ்வாறு இருந்தன என்பதை பற்றி குறித்துள்ளார்.

⇒ வரலாற்றுச் செய்திகள், அரசியல் அமைப்பு, நிர்வாக முறை, பிரெஞ்சு படை காரைக்காலை பிடிக்க சென்று தோல்வி அடைந்தது, டெல்லியின் மீது பாரசீக படையெடுப்பு, குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்கிய செய்திகள், இலபூர்தொனே கப்பல் பிரஞ்சு நாட்டில் இருந்து சென்றது, வெளிநாட்டு பயணிகள் வந்து சென்ற நிகழ்வுகள், முதலிய வரலாற்றுச் செய்திகள் இடம் பெற்றுள்ளன.

⇒ மேலும் வணிக செய்திகள், பண்பாட்டு நிலை குறித்த செய்திகள், நீதி வழங்கல், மொழியியல் செய்திகள் போன்றவை இடம் பெற்றுள்ளன.

⇒ ஆனந்தந்தரங்கர் நாட்குறிப்பு குறித்து உ.வே.சா:

⇒ தமிழ் தாய் நெருப்பினாலும், வெள்ளத்தினாலும், பாதிக்கப்பட்டாலும் அவளது ஆபரணங்கள் தொலைவில் உள்ள நகரமான பாரீசில் மிகவும் பாதுகாக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன.

⇒ ‘டைரியம்’ என்ற இலத்தீன் சொல்லின் மூலமாக ‘டைஸ்’ என்ற சொல்லிலிருந்து ‘டைரி’ என்று சொல் உருவானது.

⇒ நாட்குறிப்புகளின் முன்னோடியாக திகழ்வது எபி மெரிட் எனப்படும் கிரேக்க குறிப்பேடு ஆகும்.

⇒ ஆனந்தரங்கரின் நாட்குறிப்புகள் 25 ஆண்டு கால தென்னிந்திய வரலாற்றை வெளிப்படுத்துவன.

⇒ உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் ‘சாமுவேல் பெப்பிசு’ ஆவார். ஆங்கிலேய கடற்படையில் பணியாற்றிய இவர் இரண்டாம் சார்லஸ் மன்னர் காலத்து நிகழ்வுகளை 1660 முதல் 1669 வரை நாட்குறிப்பாக பதிவு செய்துள்ளார்.

⇒ இவரை போலவே ஆனந்தரங்கம் 06–09–1736 முதல் 11–01–1761 வரை நாட்குறிப்பு எழுதியுள்ளார். இந்நாட்குறிப்பு இந்தியாவில் முதன்மையான நாட்குறிப்பு ஆகும். இதனால் ஆனந்தரங்கர் இந்தியாவின் பெப்பிசு என அழைக்கப்படுகிறார்.

⇒ **கப்பல் வந்தபோது ஏற்பட்ட மன மகிழ்ச்சியை பற்றி ஆனந்தரங்கர் குறிப்பிட்டுள்ள செய்தி:**

நாட்பட்ட திரவியம் மீண்டும் கிடைத்தது போலவும், மரணமற்ற உறவினர்கள் உயிர்பெற்று எழுந்தது போலவும், அவரவர் வீடுகளிலேயே திருமணம் நடப்பது போலவும், நீண்ட நாள் தவமிருந்து புத்திர

பாக்கியம் கிடைத்தது போலவும், தேவாமிர்தத்தை சுவைத்தது போலவும் மக்கள் மகிழ்ந்தனர். அதை காகிதத்தில் எழுத முடியாது என்று குறிப்பிட்டுள்ளார்.

⇒ சுங்கு சேஷாசல செட்டியாரின் பெண்கள் இருவருக்கு நடைபெற்ற திருமண நிகழ்வு பற்றி ஆனந்த ரங்கர் தமது நாட்குறிப்பில் எழுதியுள்ளார்.

⇒ திருமண ஊர்வலம், திருமணம் நடைபெற்ற முறை, ஆளுநர் முசே துய்ப்ளே தன் மனைவியுடன் வந்திருந்தது பற்றி அந்நாட் குறிப்பில் எழுதியுள்ளார்.

⇒ ஆளுநர் வந்த பொழுது, உட்கார்ந்த பொழுது, சாப்பிடும் பொழுது, எழுந்திருக்கும் பொழுது என ஒவ்வொரு முறையும் இருபத்தொரு தடவை பீரங்கி முழங்கியது.

⇒ ஆளுநருக்கு ஆயிரம் பணமும், அவர் மனைவி மதாம் தெப்ரமேனிக்கு 100 பணமும் அந்தரங்கமாய் கொடுத்துவிட்டு, பந்தலிலே வைத்து பாக்கு, வெற்றிலை, பன்னீர் புஷ்பம் போன்றவற்றை மட்டும் கொடுத்தனர்.

⇒ இதிலிருந்து, உயர்ந்த பதவியில் இருப்பவர்கள் திருமணத்திற்கு வரும்பொழுது, அவர்களுக்கு வெகுமானம், மரியாதை போன்றவை தரும் பழக்கம் நடைமுறையில் இருந்தது பற்றி தெரிய வருகிறது.

**ஆனந்த ரங்கர் காலத்தில் வழக்கில் இருந்த நாணயங்கள்**

| | |
|---|---|
| 480 காசு | 1 ரூபாய் |
| 8 பணம் | 1 ரூபாய் |
| 1 பொன் | 1 / 2 வராகன் |
| 1 மோகரி | 1 /4 ரூபாய் மதிப்புள்ள தங்க நாணயம் |
| 1 சக்கரம் | 1 /2 வராகனுக்கும் கூடுதல் மதிப்புள்ள தங்க நாணயம் |
| 60 காசு | 1 பணம் |
| 24 பணம் | 1 வராகன் |
| 1 வராகன் | 3 அல்லது 3.2 ரூபாய் |

**ஆனந்த ரங்கர் பெற்ற சிறப்புகள்**

⇒ முசபர்சங், ஆனந்தரங்கருக்கு 1749–ஆம் ஆண்டில் 3000 குதிரைகளையும், 'மன்சு பேதார்' என்ற பட்டத்தையும் வழங்கினார்.

⇒ செங்கற்பட்டு கோட்டைக்கு தளபதியாகவும், அம்மாவட்டம் முழுமைக்கும் ஜாகீர்தாரராகவும் நியமனம் பெற்றார்.

⇒ துபாசியாக, வணிகராக இருந்த போதிலும் மன்னரைப் போல் மதிக்க பெற்றார். துய்ப்ளே ஆட்சியில் ஆனந்தரங்கருக்கு தனிப்பட்ட உரிமைகள் வழங்கப்பட்டிருந்தன.

⇒ ஆளுநர் மாளிகைக்குள் பல்லக்கில் செல்லும் உரிமையும், செருப்பணிந்து செல்லும் உரிமையும் பெற்றிருந்தார். தங்கப்பிடி போட்ட கைத்தடி வைத்துக் கொள்ளவும் உரிமை பெற்றிருந்தார். அவ்வாறு அவர் செல்லும் போது மங்கள ஒலிகள் ஒலிக்கும். பொதுமக்கள் தொடர்பான வழக்குகளை விசாரித்து தீர்ப்பு வழங்கும் உரிமையும் அவருக்கு இருந்தது.

⇒ 12–01–1761 அன்று ஆனந்தரங்கர் மறைந்தார். எனவே அவருடைய நாட்குறிப்பு 11–01–1761 அன்றோடு முடிவடைகிறது. ஆனந்தரங்கூர் நாட்குறிப்பு 12 தொகுதிகளாக தமிழில் வெளிவந்துள்ளது.

⇒ அந்த காலத்தில் நடந்த செய்திகளை எல்லாம் முக்கியமானது, முக்கியமில்லாதது என்று கூட கவனிக்காமல், ஒன்று தவறாமல், சித்திரகுப்தன் எழுதி வரும் பதிவை போல் நல்ல பாஷையில் அன்றாடம் விஸ்தாரமாக ஆனந்த ரங்கர் எழுதி வைத்திருக்கிறார்.

⇒ இக்கூற்று மகாகவி பாரதியாரால் கூறப்பட்டது என புதிய சமச்சீர் கல்வி 2018 பதிவில் (பக்கம் எண் 142–ல் கூறப்பட்டுள்ளது). ஆனால்

⇒ வ.வே.சு அவர்களால் கூறப்பட்டது என புதிய சமச்சீர் 2021 பதிப்பில் (பக்கம் 120–ல்) கூறப்பட்டுள்ளது.

**ஆனந்த ரங்கர் பற்றிய நூல்கள்:**

- ஆனந்தரங்கன் கோவை– தியாகராய தேசிகர்
- ஆனந்தரங்கன் பிள்ளைத்தமிழ் – புலவரேறு அரிமதி தென்னகன்
- வானம் வசப்படும் – பிரபஞ்சன்

**தாகூரின் கடிதங்கள்**

⇒ 'சாகித்திய அகாதமி' வெளியிட்டுள்ள தாகூரின் கடிதங்கள் என்னும் நூலை தமிழில் மொழியாக்கம் செய்தவர் த.நா. குமாரசுவாமி. அவர் தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு, வங்கம், பாலி, ஆங்கிலம், ஆகிய மொழிகளை கற்று தேர்ந்தவர்.

⇒ வங்க அரசு, தமிழ் – வங்க மொழிகளுக்கு அவர் ஆற்றிய தொண்டுகளையும் பாராட்டி 'நேதாஜி இலக்கிய விருது' அளித்து சிறப்பித்துள்ளது.

⇒ தாகூர் தம்முடைய கடிதத்தில், நாட்டுப்புறத்தில் இயற்கை சிறந்து விளங்குகிறது என்றும், பட்டணத்தில் மனித சமுதாயம் தான் முக்கியமானதாக கருதப்படுகிறது என்றும் கூறியுள்ளார். பட்டணத்தில் தன் சுக, துக்கத்திற்கு முன் மற்ற உயிர்களின் சுக, துக்கங்களை பற்றி எண்ணாத மனிதனுடைய கொடூரமான தன்மை குறித்து வேதனைப்படுகிறார்.

⇒ கிழக்கு வங்காளத்தின் பெரிய நதியான 'பத்மாவில்' வெள்ளம் ஏற்பட்டதால் மரம் சாய்ந்து அதில் வசித்து வந்த பறவை வெள்ளத்தில் வீழ்ந்து இறந்தது, குறித்து வேதனைப்படுகிறார்.

⇒ நாம் அறிந்து கொள்ள முடியாத மலர்களின் பெயர்கள் குறித்து "பெயரில்லா மலர்களின் நாட்டில் கவிஞரின் நிலை எவ்வளவு மோசமானது என்பதை யோசித்துப் பார் மலர்களின் ராஜ்ஜியத்தில் அவனுடைய பேனாவின் நடமாட்டம் எத்துனை குறுகியது" என்று கூறுகிறார்.

⇒ பல முயற்சிகள் செய்து "ஜாதி" என்பது முல்லை வகையில் ஒரு பூ (சமேலி) என்பதைத் தெரிந்து கொண்ட அவர், "ஸேவுந்தி" என்பது எந்த மலரின் பெயர் என்பதை கண்டுபிடிக்க இயலவில்லை என்பதை கூறி வருந்துகிறார்.

⇒ சாந்தி நிகேதனத்தில் இருக்கின்ற "பியால" என்ற மரம் குறித்தும், புறாக்கண்ணி (கமோதாக்ஷி), மயில்விழியால் (மயூராக்ஷி), விருப்புடையவள் (இச்சாமதி) என்ற ஆறுகள் குறித்தும் தம் கடிதத்தில் எழுதி இருக்கிறார்.

⇒ 'தாமஸிகம்' (மெடிரியலியம்) குறித்து விளக்கியுள்ளார். காகம், குயில், மைனா, 'பௌ – கதா– கவோ' (ஒருவகை புறா இனம்) போன்ற பறவைகள் குறித்தும், பெயர் தெரியாத நேர்த்தியான புட்கள் குறித்தும், குறிப்பிடும் அவர் இயற்கையிடம் நாம் காட்டும் அலட்சிய மனப்பான்மை தான் நம்முடைய தோல்விகளுக்கெல்லாம் மூல காரணம். இந்த சுபாவம் காரணமாகத்தான் நாட்டு மக்களிடமும் நமது அலட்சிய மனப்பான்மை தீவிரமாக தலைதூக்குகிறது என்று கூறியுள்ளார்.

⇒ "பரீட்சையில் சேர வேண்டி சரித்திரப் பாடத்தை புறக்கணிக்க முடியாது. நமது தேசப்பற்று அந்த புத்தக மூட்டையால் உருவானது. தேசத்து மக்களிடம் கொண்டுள்ள பற்றுதலின் காரணமாக உண்டானதல்ல" என்று தம் கடிதத்தில் எழுதியுள்ளார்.

⇒ தம் 16–வது வயதிலேயே கவிதைகள் எழுதத் தொடங்கினார்.

⇒ 1913–ல் கீதாஞ்சலி என்ற கவிதை நூலின் ஆங்கில மொழி பெயர்ப்புக்காக இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றார்.



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

⇒ **1919–ல்** ஜாலியன் வாலாபாக் படுகொலையால் ஆங்கில அரசை கண்டித்து அவர்கள் வழங்கிய சர் பட்டத்தை துறந்தார்.

⇒ **1921–ல்** விஸ்வ பாரதி பல்கலைக்கழகத்தை நிறுவினார். "பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீன மனிதர்" கிழக்கையும், மேற்கையும் இணைத்த 'தீர்க்கதரிசி' என்றெல்லாம் போற்றப்பட்ட தாகூர் மக்களால் அன்புடன் 'குருதேவ்' என்று அழைக்கப்பட்டார்.

⇒ இந்தியாவின் நாட்டு பண் "ஜன கன மன" தேசத்தின் நாட்டுப்பண், "அமர்சோனார்" பங்களா இரண்டையும் எழுதியவர்.

www.tnpscgroup4.in


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in